# சிறுபாணாற்றுப்படையில் பாணர்களின் வாழ்க்கை

*முனைவர் வெ. திலகம்*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வு மையம்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம்

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.5281/zenodo.14958635

## *முன்னுரை*

*எங்கே செல்வது என ஏங்கி இருப்பவர்களைக் கண்டு அங்கே செல்லுங்கள், உங்களுக்கு வேண்டியது கிடைக்கும் என ஆற்றப்படுத்துவது ஒரு சிறந்த பண்பு. அந்தப் பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது சிறுபாணாற்றுப்படையாகும். இந்நூலில் கூறப்பட்டுள்ள பாணர்களைப் பற்றி இங்கு ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

*சங்ககாலத்தில் பண்ணினைப் (இராகத்தினை) பாடுவோர் பாணர் என அழைக்கப்பட்டனர். இப்பாணர்களை இசைப்பாணர் (பாடுபவர்), யாழ்ப்பாணர் (யாழ் வாசிப்பவர்), மண்டைப்பாணர் (பிச்சை கேட்டுப் பிழைக்கும் பாணர்) என மூன்று வகையானவர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில் இன்குரல் இடவயின் தழீஇ என வருகின்ற பாடலை நோக்குங்கால் பாணர்களின் பாகுபாட்டினை அறிய முடிகின்றது. சிறுபாணாற்றுப்படை முழுவதும் நல்லியக் கோடனின் பரிசில் பெற்றுத் திரும்பிய பாணர்களின் கூற்றாகவே அமைந்துள்ளது.*

*இந்நூலின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என அறிய முடிகின்றது.*

## *பாணர்கள்*

*பாடும் பணியே பணியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பாணர்கள். பாணர் என்பவர் இசையிலும் கூத்திலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கினர். இவர்களின் சிறப்பினை அறிந்தே புலவர்களும் பாணர்களைப் போற்றியுள்ளனர். பாணர் என்பவர் பாடுபவர் மட்டுமல்லாது, பாடுவதும், ஆடுவதும், கருவி இசைப்பதுவும் ஆகிய அனைத்தையும் கூட்டமாக ஒருங்கிணைத்து செய்யக் கூடியவர்களாக விளங்கினர். இவர்கள் வள்ளல்களைத் தேடிச் செல்லும் போது துணைவியர் மற்றும் சுற்றத் தினரையும் அழைத்துச் சென்றனர். பாணர்கள் தம் கைவண்மையில் யாழினை மரபு வழியாக முறையாக வாசிக்கும் திறன் பெற்றிருந்தார்கள். மேலும் இவர்கள் ஆடலிலும் அழகிலும் சிறந்து விளங்கினர் என்பதை பாணாற்றுப்படை நூல்கள் கூறுகின்றன.*

**பாணரின் வாழ்க்கை**

பாணர்கள் இசைப்பதிலும் இசைக்கருவிகள் வாசிப்பதிலும் அவர்களின் மனைவியரான விறலியும் ஆடல் பாடல்களில் தேர்ச்சி பெற்று பரற் கற்களிலும், வெயிலிலும் நடந்து வந்து யாழ் வாசித்து ஆடிப்பாடி வாழ்க்கை நடத்தினர். பாணன் நடந்து வந்த களைப்புத் தீர சிறிய யாழினைக் கையிலெடுத்து பாலைப் பண்ணினை (மோகன இராகம்) வாசிக்கின்றான். விறலியின் மென்மையான பாதத்தினை அவர்களோடு வந்த இளையர் பிடித்து விடுகின்றனர்.

கலையும், பண்பும், அன்பும் நிறைந்த பாணர்களின் வாழ்க்கையில் வறுமையும் முக்கிய அங்கம் வகித்தது என்பதையும் சிறுபாணாற்றுப்படை மூலம் அறிகிறோம். பாணனின் வீடு சிதல் அறித்துக் கிடக்கின்றது. சமைப்பதற்கு உணவுப் பொருட்களும் இல்லை. குப்பைக் கீரையைக் கிள்ளி உப்பு இல்லாததால் உப்பின்றி வேக வைத்து மற்றவர்கள் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக வீட்டுக் கதவினைத் தாழிட்டு குடும்பத்தினருடன் உண்கிறாள் பாணனின் மனைவி. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் என்பதை,

**"யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
பூண்அகத்து ஒடுங்கிய வெம்முலை, முலைஎன
வண்கோள் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இகுதரும் எயிற்றின் எயிறுஎன
குல்லைஅம் புறவில் குவிமுகை அவிழ்ந்து
முல்லைசான்ற கற்பின் மெல்லியல்
மடமான் நோக்கி வாள்நுதல் விறலியர்
நடைமெலிந்து அசைஇய நல்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவரப்"**

**(சிறுபாண்.25-33)**

என்ற பாடலடிகளின்வழி அறியமுடிகின்றது.

**பாணர்களின் மீது மன்னனின் மாண்பு**

ஓய்மான் நல்லியக்கோடன் பாணர்களுக்கு மூங்கிலின் மெல்லியப்பட்டையை உரித்தாற் போன்ற உடையினைக் கொடுத்துள்ளான். மன்னன் தன் இல்லத்திற்கு வருகின்றவர்களுக்குப் பொன்னாலான கலத்தில் விருந்து படைத்து ள்ளான். "விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி" என்ற வரிகளால் உணவை மன்னனே பரிமாறியதாக அறிய முடிகின்றது.

**இசைக்கருவி**

யாழ் சிறிய யாழ் பேரியாழ் எனப்பட்டன. சிறுபாணன் பயன்படுத்தியது சிறிய யாழ். யாழின் அமைப்பு மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சங்கத் தமிழர்களின் இசையறிவும் இசைக் கருவிகளைக் கையாண்ட விதமும், இசைக் கருவியின் அமைப்பினைப் பற்றி முழுவதும் அறிந்து வைத்திருந்த திறமும் உணரத்தக்கது. யாழை இசைப்பதற்குரிய நூல்களும் இருந்துள்ளன. நட்டபாடை, சீகாமரம் போன்ற பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**இளைப்பாறும் பாணன்**

**"அயில் உருப்பு அனையஆகி ஐதுநடந்து
வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப
பாலை நின்ற பாலை நெடு வழி
கரணமுதல் மரா அத்த வரிநிழல் அசைஇ"**

**(சிறுபாண்.7-12)**

அதாவது கருமணல் இரும்பு வெப்பமேற்று தன்மை போல் இருந்தது. அம்மணலில் மெல்ல நடந்து வந்தான் பாணன். வெயிலாற் வெப்ப மேறிய பரற்கற்களும் காலைக் கிழித்தன. வேனிற் காலம் நடைபெறுகின்ற வெம்மையான கால மாதலால் காலையிலேயே கதிரவனின் வெப்பம் மிகுதியாக இருந்தது. பாலை நிலத்தின் வறண்ட தன்மை நிலைபெற்ற பாலை நிலமாகிய நீண்ட காட்டு வழியில் கடம்ப மரத்தின் கிளையாகிய நிழலில் குடும்பத்தினரோடு தங்கியிருந்தான்.

மேலும், பாணன் காட்டுவழியே நடந்து வந்ததால் களைப்படைந்து விறலியின் காலை இன்னும் வித்தைக் கற்றுக் கொள்ளாத இளையார் அவள் காலை மெல்ல வருடி விடுகின்றனர். இதனை,

**"நடைமெலிந்து அசைஇய நல்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவரப்"**

**(சிறுபாண்.32-33)**

என்ற பாடலடியின்வழி அறியமுடிகின்றது.

இவ்வாறாக, இவர்கள் ககசுடப்பட்டு பயணம் செய்யும்போது ஏற்கனவே சென்று பாடி பரிசு பெற்ற பாணனைச் சந்திக்கிறார்கள். அவன் தான் பெற்ற செல்வத்தையெல்லாம் காட்டி நீங்களும் அங்கு சென்று பாடி, ஆடி பரிசு பெற்று சுகமுடன் வாழுங்கள் என்று கூறுகின்றான். இதனை,

**"பொன்வார்சுந்து அன்ன புரியடங்கு நரம்பின்**
***இன்குரற் சீறியாழ் இடவாயின் தழீஇ***
***நைவளம் பழுநிய நயந்தெரி பாலை***
***கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க***
***இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ***
***தனிகூர் எவ்வமொரு துயர் ஆற்றுப்படுப்ப***
***முனிவு இகந்து இருந்த முதுவாய் இரவல"***

***(சிறுபாண்.34-40)***

என்ற பாடலடிகளின்வழி பாணர்களின் கலைப்பயணமும், பயணத்தின்போது அவர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகளைப் பற்றியும் அறியமுடிகின்றது.

***பரிசல் பெற்ற பாணன், யாழ்வாசிக்கும் பாணன் சந்திப்பு***

பொன்னினை உருக்கிச் செய்தது போன்று முருக்கேறிய நரம்பினையுடைய இனிய குரலை எழுப்பும் சிறிய யாழை இடப்பக்கம் அசைத்துக் கொண்டு பாலை யாழை வாசிப்பதில் வல்லவனாகிய பாணன் இவ்வுலகில் வாழ பரிசில் தருவோனை நாடி வறுமை தந்த மிகுதியான துன்பத்தோடு அத்துயரம் வழிப்படுத்த நடந்து வந்த வருத்தம் தீர்ந்து இளைப்பாறியிருக்கும் பேரளவு வாய்ந்த இரவலனே! என விளித்து அப்பாணனின் வறுமைக்கு வடிகாலால் தான் பரிசு பெற்று வந்த வள்ளலிடம் அவனையும் வழிப்படுத்தும் நோக்கில் கடையேழு வள்ளல்களின் கொடைத் தன்மையைக் கூறி, தான் பரிசு பெற்று வந்த நல்லியக்கோடனின் வள்ளல் தன்மையினைப் புகழ்கின்றான்.

***"எழுவர் புண்ட ஈகைச் செந்நுகம்***
***விரிகடல் வேலி வியலகம் விளங்க***
***ஒருதான் தாங்கிய உரனுடை நூன்தாள்"***

***(சிறுபாண்.111-115)***

ஏழு வள்ளல்களும் மேற்கொண்ட கொடையாகிய பாரத்தை, விரித்த கடலை வேலியாகக் கொண்ட பரந்த இந்த உலகம் விளங்கும்படி தான் ஒருவனே தாங்கிய திண்ணிய வலிய காலை உடையவனாக விளங்கினான்.

***மன்னனின் முன் பாணனின் யாழ் வாசிப்பு***

யாழின் தண்டினோடு கூடிய நரம்புகளும், புடைத்துத் தோன்றும் வார்க்கட்டும் நெகிழ வேண்டிய இடத்தில் நெகிழ்ந்தும், இறுக வேண்டிய இடத்தில் இறுகியும் அமைந்துள்ளது. அத்தகைய யாழினை உறையிலிருந்து எடுத்து அதனை தேனைப் பொழிந்து அமிழ்தால் நிரப்பி அள்ளித் தெளிப்பது போல் இன்னிசை கூட்டும் யாழின் முறுக்கேறிய நரம்பில் பாடும் வகையும் துறையும் முற்றும் உணர்ந்து யாழின் நரம்புபொலியும் குரலும் ஒன்றிக் கலக்க இசை நூல் மரபுப்படி குறைவுபடாது பாணன் இசைத்துப் பாடியதாக அறிகின்றோம். இதனை,

**"பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன**
***அம்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்***
***மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து***
***வயிறுசேர்பு ஒழுகிய வகைஅமை அகளத்துக்***
***கானக் குமிழின் கனிநிறம் கடுப்பப்***
***புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம் பெய்து***
***அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்***
***பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்வி***
***கூடுகொள் இன்னியம் குரல் குரலாக"***

***(சிறுபாண்.221-229)***

என்ற பாடலடியின்வழி அறியமுடிகின்றது.

மேலும், நல்லியக்கோடனானவன் பெரியோர்களைக் கண்டால் கூப்பும் கைகளை உடையவன். இளையோர்களைக் கண்டால் அன்போடு ஆரத்தழுவிக் கொள்பவன். தேர்எறி வரும் பகைவரை எதிர்த்துப் போரிட்ட வெம்மையான வேலினை உடையவன் என்றும் பாணர்கள் போற்றிப் பாடினர். இதனை,

***"அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்***
***தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்***
***சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி***
***யாம்அவண் நின்றும் வருதும் நீயிரும்"***

***(சிறுபாண். 140144)***

என்ற பாடலடியின்வழி அறியமுடிகின்றது.

### பாணனின் வறுமை

பாணனின் வறுமையினை உணர்த்தும் பகுதி கற்போர் உள்ளத்தை உருக்குகின்றது. இதனை,

**"நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென"**

**(சிறுபாண்.14)**

**"மால்வரை ஒழுகிய வாழை வாழை"**

**(சிறுபாண்.21)**

என்ற வரிகளில் ஒரு சொல் அடுத்தடுத்து அமைந்து பொருட்சுவை தருகின்றது. பிற்காலப் புலவர்கள் சொல்லடுக்கிப் பாடுவதற்கு நத்தத்தனார் வழிவகுத்துள்ளார். இதனை,

**"...... இந்நாள்**
**திறவாக கண்ண சாய் செவிக் குருளை**
**கறவாப் பால்முனை கவர்தல் நோனாது**
**புனிற்றுவாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**குப்பை வேளை உப்பு இலி வெந்ததை**
**....................**
**மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன்**
**மீசையும் அழிபசி வருத்தம்"**

**(சிறுபாண்.129-140)**

என்ற பாடலடிகளின் வழி பாணர்களின் வாழ்க்கையானது வறுமையில் அமைந்த வாழ்க்கையாக உள்ளதை அறியமுடிகின்றது.

### முடிவுரை

நீலமணி போலும் நிறமுடைய மயிற்தோகை விரித்து ஆடுவதற்குக் காரணமான மகளிர் கூந்தலைப் போன்ற மழை மேகங்கள், நெடிய சிகரங்களை முட்டி இடி வீழ்ந்து ஏறிச் செல்லுகின்ற அறிய மலைநாட்டுத் தலைவன் நள்ளியக் கோடன். இளந்தளிரினால் கட்டப்பட்ட மாலையினை அணிந்தவன். புகழ் நிலைத்து நிற்றற்குரிய பண்புகளால் சிறந்து விளங்குபவன் அவனை விரும்பிச் சென்றால் அன்றே பரிசில் பெறலாம் என நினைத்தே பாணர்களும் சென்று பாடி ஆடி பரிசில் பெற்று வாழ்ந்தனர்.

### துணைநூற்பட்டியல்


1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி - முனைவர் மா. இராசமாணிக்கனார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1998
2. பத்துப்பாட்டு மூலமும் உரையும் - முனைவர் ச.வே. சுப்பிரமணியன் - கோவிலூர் மடலாயம் வெளியீடு, கோவிலூர். முதற்பதிப்பு 2010.
3. பத்துப்பாட்டு ஆய்வுக்கோவை - சிறுபாணாற்றுப்படை - குறிஞ்சிப் பதிப்பகம், ஆம்பூர் - முதற்பதிப்பு 2012
4. சங்க இலக்கியம் மூலம் முழுவதும் - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2006